# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.248/2021

Name : DW1 மகாலட்சுமி

Husband's Name : அய்யந்துரை

Date : 01.08.2025

**குறுக்கு விசாரணை:-**

என் இளைய மகன் பெயர் முருகன். மேற்படி முருகன் மோகன் என்பவரிடம் ரூ.2,50,000/- பெற்றிருந்தார் தேதி நினைவில்லை. என் மகன் முருகன் எத்தனை ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் எத்தனை கையெழுத்துக்கள் போட்டார் என்று எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் தன் மகன் முருகன் ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து போடவில்லை என்றும் தான் தான் ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து போட்டதாக சொல்கிறார். சாட்சி மீண்டும் தான் தான் ரூ. 2,50,000/- கடனாக வாங்கியதாக கூறுகிறார். 2 1/2 லட்சம் கடன் கேட்டேன் 2 1/2 லட்சம் ரூபாய் கொடுத்தார். என் மூத்த மகன் பெயர் முத்து. என் மூத்த மகன் முத்துமவும் கடன் எதுவும் வாங்கவில்லை நான் தான் வாங்கினேன். என் மூத்த மகன் முத்து எந்த ஸ்டாம்ப் பேப்பரிலும் பத்திரத்திலும் கையெழுத்து எதுவும் போடவில்லை. என்னுடைய நிரூபண பிரமான வாக்குமூலத்தில் என் மூத்த மகன் 1,50,000/- லட்சம் கடன் பெற்றதாகவும், என் இளைய மகன் 2,50,000/- கடன் பெற்றதாக எதுவும் சொல்லவில்லை. நான் பெற்ற கடனுக்கு 1 1/2 ரூபாய் வட்டி ஆகும். அசல் 4 ஆயிரமும் வட்டி 6 ஆயிரமும் சேர்த்து ரூ.10,000/- கொடுத்திருந்தேன். எந்த தேதியில் வட்டி எந்த தேதி வரை கணக்கிட்டு

கொடுத்திருந்தேன் என்று சொன்னால் 2017 முதல் அதாவது கடன் வாங்கிய தேதி முதல் வட்டியை கொடுத்து வந்தேன். கொரோனா வரும் வரை வட்டியை செலுத்தி வந்தேன். அதன்பிறகு செலுத்தவில்லை. மேற்படி தொகையை வட்டியும் அசலும் செலுத்தி வந்ததற்கு ஆதாரமாக ஆவணம் எதாவது இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மீதி ரூ.2,40,000/- வட்டியும் அசலும் சேர்த்து தர வேண்டியுள்ளது. என் மூத்த மகன் முத்து 1 1/2 லட்சம் கடன் வாங்கியதாக சொல்லும் சங்கதி சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கைரேகை என்னுடையதா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய இரு மகன்களிடமும் வெற்று பத்திரங்கள் மற்றும் புரோநோட்டுகளில் கைரேகை கையெழுத்து பெற்றதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2020 ஜுன் மாதம் என்னிடம் வெற்று பேப்பர்களில், புரோநோட்களிலும் ஸ்டாம்ப் பேப்பர்களிலும் கைரேகை பெற்றதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 15.12.2020 அன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான் நான் அதை பெற்றுக் கொண்டேன். அதற்கு பதில் கொடுத்தேனா இல்லையா என தெரியவில்லை. அவவாறு அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டு நான் வாதி சரவணனை அணுகி கேட்ட போது இது சாதாரண நோட்டீஸ் தான் அதன் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கமாட்டேன் பணத்தை கொடுத்து விடுங்கள் என்று என்னிடம் சொன்னதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 16.06.2021 தேதியில் மீண்டும் ஒரு நோட்டீஸ் அனுப்பியிருந்தார் என்று சொன்னால் சரிதான். அதற்கும் பதில் நோட்டீஸ் கொடுத்தேனா என்று தெரியவில்லை. மோகன் என்பவரிடமிருந்து நான் 2 1/2 லட்சம் கடன் பெற்றுக் கொண்டு வெற்று ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து செய்யததாக சொல்லும் சங்கதி தவறானது என்றாலும் அவ்வாறு மோகனிடம் சொன்ன கடன் தொகை எதையும் பெற்றிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதியிடம் தாவா

சொத்தை ரூ.10,00,000/- ற்கு கிரயம் பேசி முன் பணம் ரூ.8,00,000/- பெற்றுக் கொண்டு ஆறு மாத காலத்திற்குள் மீது ரூ.2,00,000/-ஐ செலுத்த பெற்றுக் கொண்டு கிரயம் எழுதி தருவதாக ஒப்புக் கொண்டு கிரய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.1 ஏற்படுத்திக் கொடுத்தேன் என்று சொன்னால் தவறு. மோகனிடம் கடனுக்கு வெற்று ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்ததை பயன்படுத்தி வாதி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்டவாறு மீதி தொகை ரூ.2,50,000/- பெற்றுக் கொண்டு கிரய ஒப்பந்தத்தில் கண்டவாறு கிரயம் எழுதி தர கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் தவறு. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.